295—

சத்துணவுத் திட்டத்திற்கு தொழிலதிபர்கள் உதவி.

*4062—திரு. இராம. இராமநாதன் :

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா ;

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு உதவிட எத்தனை தொழில் அதிபர்கள் முன வந்துள்ளனர் ?

(ஆ) அவர்களால் அரசுக்கு அளிக்கப்பட இருக்கின்ற தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நன்கொடையாளர்கள், தொழில் அதிபர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் சத்துணவுத் திட்டக் கட்டிடங்களைப் பழுதுபார்த்து பராமரிக்கும் திட்ட மொன்றை, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அவர்களுடைய அரிய ஆலோசனையின் பேரில், தமிழக அரசு 30–7–1991 நாளிட்ட அரசாணை எண், 353-ன்படி அறிவித்துள்ளது. இது வரை அரசுக்குக் கிடைத்த தகவல்படி 7,468 மையங்களில் சுமார் 1.45 கோடி ரூபாய் மதிப்புக்கு பழுது பார்க்கப்பட்டுள்ளது.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு எவ்வளவு பேர் தாராளமான நன்கொடை அளித்து உதவி செய்து வந்திருக்கி றார்கள்? இதற்கான மொத்தத் தொகை இதுவரை கிடைத்தது எவ்வளவு? தஞ்சை மாவட்டத்தில் இதுவரை எத்தனை இது போன்ற சத்துணவுக் கூடங்கள் சீர் செய்யப்பட்டுள்ளன? இவை அனைத்திற்கும் மேலாக, சத்துணவு தந்திருக்கிற சரித்திர நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தவழ்ந்து, வாழ்ந்து, வளர்ந்து, பயின்றிருக்கிற கும்பகோணம் யானையடி பள்ளியிலே, அந்தச் சத்துணவுக் கூடத்தை, சீரிய முறையிலே, நல்ல முறை யிலே செப்பனிட்டு—மேலும், அந்தப் பள்ளியை இன்னும் யானையடிப் பள்ளி என்றே சொல்லி வருகிறார்கள்—அதற்குத் தங்கத் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சூட்டி, அந்தச் சத்துணவுக் கூடத்தைச் சீர்படுத்துவதற்கு அர சிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

1992 மார்ச் 20]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தொழில் அதிபர்கள், மட்டுமின்றி தொண்டு நிறுவனங்கள், தனியார் நன் கொடையாளர்கள், அரசின் பொது நிறுவனங்கள் ஆகியோரைச் சார்ந்தவர்கள், இந்தப் பழுது பார்க்கின்ற பணிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் 7,468 கட்டிடங்கள் இதுவரை பழுதுபார்க்கப்பட்டுள்ளன, ரூ. 1.45 கோடியில் இவ்வளவும் பழுதுபார்க்கப்பட்டுள்ளன, தஞ்சை மாவட்டத்தில். குழந்தை கள் நல மையங்கள் 1,091 இருக்கின்றன. இவற்றில் பழுது பட்டவை 486. இவற்றில் 284 குழந்தை நல மையங்களில் இப்போது பழுது பார்க்கின்ற பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன, அதேபோல் பள்ளி மையங்கள் 1,529 இருக்கின்றன அவற்றில் 796 பழுதடைந்திருக்கின்றன. அவற்றில் 538 பள்ளிகளின் சமையல் அறைகள் பழுதுபார்க்கப்படுகின்றன. 822 நன்கொடை யாளர்கள் மூலம் ரூ. 12 இலட்சம் மதிப்பில் இந்த பழுது பார்க்கக் கூடிய பணிகள் துவங்கப்பட்டு, வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. கும்பகோணம் பகுதியில், பொது மக்களால் அழைக்கப்படுகின்ற பெயரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசினுடைய எந்த சத்துணவுக் கூடம், எங்கே அமைக்கப்பட்டிருந்தாலும் அது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடம் என்றுதான் அழைக்கப்படுகிறது என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயர், சத்துணவுக் கூடங்களுக்கு நிலவி வருகிறது. அதே நேரத்தில், அவர் பயின்றிருக்கிற பள்ளிக்கும், நீங்கள் டாக்டர் புரட்சித் தலைவர் பள்ளி என்கிற பெயரை ஏற்படுத்த வேண்டும். அதோடு, இன்றைக்குச் சத்துணவுக் கூடங்களில், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதே போல், வரவிருக்கிற ரம்ஜான் பண்டிகை, கிறிஸ்மஸ் பண்டிகை போன்ற பண்டிகைக் காலங் களிலும் கூட, அந்தக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவதற்கு செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற நிதி நிலை நெருக்கடியில் இவற்றை மெதுவாக அரசு பரிசீலித்து பதில் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர் செல்வம்,

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கட்டிடம் கட்டுவதற்கு உதவி புரியும் நன்கொடையாளர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் சீரிய அக்கறையை எடுத்து நடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நன்கொடைத் தொகைக்கு வருமான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மைய அரசின் நிதி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை மத்திய அரசு உடனடியாக ஏற்றுக் கொண்டு அதற்குரிய அனைத்து விண்ணப்ப பாரங்களை அனுப்பி வைத்து அரசு ஏற்படுத்தி இருக்கிற தேசிய கமிட்டிக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அந்த வகையில் தமிழக அரசு அனைத்து விண்ணப்ப பாரங்களையும் பூர்த்தி செய்து மைய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. மைய அரசு தான் இதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 296, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

296—

நிலக்கோட்டையில் ஆதிதிராவிட மாணவிகளுக்கு தொழிற் பயிற்சிப்பள்ளி.

*3871— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நிலக்கோட்டையில் படித்து முடித்த ஆதிதிராவிட மாணவிகள் பயன்பெறும் வகையில் தொழிற் பயிற்சிப்பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.